கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2013/2014
(யூலை/ஆகஸ்ட் 2015)

**EDUS 4104 கல்வி உளவியலின் உயர்தரக் கோட்பாடுகள்**
**Advance theories in Education Psychology**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

01.(அ) புலக்காட்சியானது ஒருவரிடத்தே எவ்வாறு ஏற்படுகின்றது என்பதனை விளக்குவதுடன் புலக்காட்சி உருவாவதில் ஒருவரின் அகவயக் காரணிகள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) வகுப்பறையில் மாணவர்களிடத்தே சிறந்த புலக்காட்சியை ஏற்படுத்துவதில் ஆசிரியர் கவனிக்க வேண்டிய பிரதான விடயங்களைத் தெளிவுபடுத்துக.

(13 புள்ளிகள்)

02.(அ) உண்மைப் பொருட்களின் அனுபவங்கள் ஊடாக சிந்தனை முன்னேறுகின்றது என்பதை ஜீன் பியாஜே (Jean Piaget) எவ்வாறு தூல சிந்தனைப் பருவத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்குகின்றார் என்பதை ஆராய்க.

(13 புள்ளிகள்)

(ஆ) எந்தப் பாடத்தினையும் ஓர் அறிவாற்றல் சார் நேர்மையான அமைப்பில் எந்த விருத்திப் படிநிலையிலுள்ள எப்பிள்ளைக்கும் கற்பிக்கலாம் என்பதற்காக ஜெரோம் S புருணரால் (Jerome.S.Bruner) முன்வைக்கப்பட்ட அறிகை வளர்ச்சியின் இயல்புகள், கற்பித்தல் கோட்பாட்டின் இயல்புகள் என்பவற்றைப் பகுப்பாய்வு செய்க.

(12 புள்ளிகள்)

03.(அ) நிபந்தனைப்படுத்தல்மூலம் கற்றலை ஏற்படுத்துவதுடன் மட்டுமன் பிழையான கற்றலை நீக்கவும் முடியும் என்பதை நிரூபிக்க ஆய்வின மேற்கொண்ட J.B.வாட்சனின் (J.B.Watson) கருத்துக்களை எவ்வா வகுப்பறைக் கற்றலில் பயன்படுத்த முடியும் என்பதை விளக்குக.

(15 புள்ளிக

(ஆ) Clark.L.Hull என்பவரின் தேவை தணிப்புக்கொள்கையில் தேவை, உந் தணிப்புச் செயன்முறைகள் எவ்வாறு கற்றல் இடம்பெறுவதற் உதவுகின்றன என்பதனை அவர் மேற்கொண்ட பரிசோதனை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(10 புள்ளிக

04. ஸ்கின்னரின் தொழிலி சார் நிபந்தனைப்பாட்டுக் கொள்கையில் அ வலியுறுத்தும் பின்வரும் எண்ணக்கருக்களை அவரது பரிசோதன முறைகளில் இருந்து உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

1. தெறிவினைச் செயல்கள்
2. காலற்துலங்கல்கள்/தொழிலிகள்
3. நிரலித்த போதனை
4. கருவிசார் நிபந்தனைப்பாடு
5. நடத்தை உருவாக்கம்

(05x05=25 புள்ளிக

05.(அ) ரோல்மன் (Edward.C.Tolman) தனது குறிகற்றற் கொள்கையில் கூறு இடம் கற்றல், மறைகற்றல், வெகுமதி எதிர்பார்க்கைக் கற்றல் என்ப எவ்வாறு ஒரு பாடசாலைக் கற்றல் கற்பித்தல் செயன்முறைகளி பயன்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குக.

(10 புள்ளிக

(ஆ) கற்றல் இடமாற்றம் தொடர்பான கொள்கைகளுள் பொதுமையாக்க கொள்கை பெறும் முக்கியத்துவத்தினை அது தொடர்பா மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக்கொண்டு ஆராய்க.

(10 புள்ளிக

06.(அ) இயல்பூக்கங்கள் அடக்கப்படுமானால் பிழையான பொருத்தப்பா பிறழ்வான நடத்தைக் கோலங்களும் தோன்றலாம் என்பதனை மக்டுகலி கொள்கையை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(13 புள்ளிக

(ஆ) ஆளுமை விருத்தியில் நனவிலிப் பண்புகள் ஏற்படுத்தும் தாக்கத்தின சிக்மன்ட் புரொய்டின் (Sigmund Frued) உளப்பகுப்புக் கொள்கை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(12 புள்ளிக

*****